**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2026-ம் வருடம் ஜனவரி மாதம்-12 ம் நாள் திங்கள்கிழமை**

**(2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மார்கழி மாதம் 28-ம் நாள்)**

**E.P.No.09/2019 in O.S.No.11/2015**

1. காளியம்மாள்(இறந்தவர்)
2. பழனிசாமி
3. லோகநாதன் ....மனுதாரர்கள் / தீர்ப்புபெற்றவர்கள்

/எதிர்/

1. சின்னராஜ்
2. தமிழ்
3. சதீஸ்
4. தேவராஜ் ..... எதிர்மனுதாரர் / தீர்ப்பு கடனாளிகள்

இந்நிறைவேற்று மனுவானது கடந்த 07.01.2026 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.N.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.C.அஜீத்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.,

**உத்தரவு**

இம்மனுவானது உ.வி.மு.ச. கட்டளை 21 விதி 35ன் படி -ஆ- அட்டவனைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள் செய்திருக்கும் ஆக்கிரமிப்பை அகற்றிக்கொடுக்கவும், அச்சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்கள், மனுதாரரின் வாரிசுகளாக மேல்முறையீட்டு வழக்கு எண்.24/2018-ல் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ள மனுவின் 2, 3 மனுதாரர்கள் வசம் கொடுக்கும்படியும், தவறும்பட்சத்தில் -ஆ- அட்டவனைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்பினை அகற்றி, 2, 3 மனுதாரர்களுக்கு சுவாதீனம் செய்து கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-**

நிறைவேற்று மனுவானது, அ.வ.எண்.11/2015 வழக்கில் விளம்புகை, சுவாதீன பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 16.04.2018-ம் தேதியில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் அடிப்படையில் எதிர்மனுதாரர்களால் மனுதாரர்களுக்கு சுவாதீனம் கொடுக்க 60 நாட்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்து. மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் மே.மு.வ.எண்.24/2018 வழக்கினை தாக்கல் செய்து, விசாரணைக்கு பின்னிட்டு கடந்த 15.02.2019-ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.11/2015-ல் வழங்கப்பட்ட தீர்ப்பும், தீர்ப்பாணையும் உறுதி செய்யப்பட்டது. எனவே, மனு -ஆ- அட்டவனைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள் செய்திருக்கும் ஆக்கிரமிப்பை அகற்றிக்கொடுக்கவும், அச்சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்கள், மனுதாரரின் வாரிசுகளாக மேல்முறையீட்டு வழக்கு எண்.24/2018-ல் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ள மனுவின் 2, 3 மனுதாரர்கள் வசம் கொடுக்கும்படியும், தவறும்பட்சத்தில் -ஆ- அட்டவனைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்பினை அகற்றி, 2, 3 மனுதாரர்களுக்கு சுவாதீனம் செய்து கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர்களின் மனு மோசடியானது, சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. அ.வ.எண்.11/2015 வழக்கானது கடந்த 16.04.2018-ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பாணையை எதிர்த்து மாண்பமை சத்தியமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் A.S.No.24/2018 தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 15.02.2019-ம் தேதியன்று மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. தள்ளுபடி உத்தரவை எதிர்த்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாம் மேல்முறையீடு S.A.No.858/2019 தாக்கல் செய்யப்பட்டு, CMP No.17734/2019-ல் கடந்த 20.08.2019-ம் தேதியன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் E.P.No.9/2019-ஐ Stay செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. S.A.No.858/2019 நிலுவையில் உள்ளதால், இந்நிறைவேற்று மனு சட்டப்படி செல்லும் தன்மையற்றதாகும். எனவே மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா என்பதேயாகும்.**

**<u>4. தீர்வு:-</u>**

**4.1** நிறைவேற்று மனுவானது, எதிர்மனுதாரர்கள் மனு -ஆ- அட்டவனைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்பினை அகற்றி, 2, 3 மனுதாரர்களுக்கு சுவாதீனம்

செய்து கொடுக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில், இந்நிறைவேற்று மனுவானது, அ.வ.எண்.11/2015 வழக்கில் கடந்த 16.04.2018-ம் தேதியன்று எதிர்மனுதாரர்களால் மனுதாரர்களுக்கு மனு சொத்தின் சுவாதீனத்தை 60 நாட்களுக்குள் வழங்க வேண்டும் என கால அவகாசம் கொடுக்கப்பட்டு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதை எதிர்த்து, மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் மே.மு.வ.எண்.24/2018 தாக்கல் செய்து, விசாரணைக்கு பின்னிட்டு, மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, அ.வ.எண்.11/2015-ல் வழங்கப்பட்ட தீர்ப்பும், தீர்ப்பாணையும் உறுதி செய்யப்பட்டது. எனவே, மனு -ஆ- அட்டவனைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்பினை அகற்றி, 2, 3 மனுதாரர்களுக்கு சுவாதீனம் செய்து கொடுக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**4.2** எதிர்மனுதாரர் தரப்பில், மேற்படி A.S.No.24/2018 தள்ளுபடி உத்தரவை எதிர்த்து, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாம் மேல்முறையீடு S.A.No.858/2019 தாக்கல் செய்யப்பட்டு, CMP No.17734/2019-ல் கடந்த 20.08.2019-ம் தேதியன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் E.P.No.9/2019-ஐ Stay செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.3** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள வழக்கில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையானது கடந்த 16.04.2018-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி, தீர்ப்பாணையில் எதிர்மனுதாரர்கள் 60 நாட்களுக்குள் மனு சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர்கள் வசம் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டிருந்தது. மேற்படி விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பிணை எதிர்த்து, எதிர்மனுதாரர்களால் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு மே.மு.வ.எண்.24/2018 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 15.02.2019-ம் தேதியன்று கீழமை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பும், தீர்ப்பாணையும் உறுதி செய்யப்பட்டு மாண்பமை சார்பு நீதிமன்றத்தால் மேற்படி மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி, தள்ளுபடி உத்தரவை எதிர்த்து, எதிர்மனுதாரர்களால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு 858/2019 தாக்கல் செய்யப்பட்டு, இரண்டாம் மேல்முறையீடும் கடந்த 14.07.2025-ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் மேல்முறையீட்டை எதிர்த்து மாண்பமை உச்சநீதிமன்றத்தில் சிறப்பு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டிருந்த போதும், சிறப்பு சீராய்பு மனு எண் விவரமோ அல்லது தடை உத்தரவோ பிறப்பிக்கப்பட்டுள்ளது என காட்டும் விதமாக

ஆவணங்கள் எதுவும் எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை நிறைவேற்றுவது நிறைவேற்றுதல் நீதிமன்றத்தின் கடமை ஆகும். இம்மனுவினை பொறுத்தமட்டில் மனுதாரர்களுக்கு விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் மனு சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர்கள் வசம் ஒப்படைக்க உத்தரவிடுவது நிறைவேற்றுதல் நீதிமன்றத்தின் கடமை ஆகும். எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு மனுதாரர்களுக்கு மனுவில் கோரிய பரிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படுகிறது. எனவே, வழக்கின் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**5. முடிவாக,**

**மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. சுவாதீனம் ஒப்படைக்க படி செலுத்த 1 வார கால அவகாசம் வழங்கப்படுகிறது. மீண்டும் அழைக்க 12.02.2026**

இந்த உத்தரவு சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.01.12 16:20:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

இருதரப்பிலும் சாட்சி சான்றாவணங்கள்

தாக்கல் இல்லை.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.01.12 16:21:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

**FAIR ORDER**
**E.P.9/2019**
**12 / 01 / 2026**
**DMC, SATHY**